உ

சிவமயம்.

# குமாரநாயகர் வெண்பா.

திரிகோணமலை

வித்துவான் - தம்பையபிள்ளையவர்கள்

இயற்றியது.

சென்னபட்டணம்

ஸ்ரீநிலைய வச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1890.

# சாத்து [illegible]

சென்னபட்டணம்

வித்துவான்

## திருமயிலை - சண்முகம்பிள்ளையவர்கள்

இயற்றிய

அறுசீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

சீர்கொண்ட பல்கலைதே ரணர்தன்வளி யொடுபொருது செம்பொன்மேருப், பேர்கொண்ட வரைச்சிகரந் தனதுபணத் தாற்சரப்பப் பெரிதுநாடித், தார்கொண்ட புயவலியா னதன்சிகரங் கடலினிட்ட தன்மைசான்ற, ஏர்கொண்ட புகழ்கொண்டெஞ் ஞான்றுமிலங் குவதிரும்பொன் னீழநாடு.

பொன்னாடு காவுடைத்துப் பொருவிலபயன்புரக்கும் பொன்னிசூழ்ந்த, நன்னாடு சோறுடைத்தான் றேருடைத்துத் திருத்தொண்டை நல்லநாடு, தென்னாடு முத்துடைத்து மலைநாடு மாதங்கத் திரளுடைத்திங், கென்னாடு சிகரிகள்சூ ழிந்நாடெல் லாமுடைத்தென் றியம்பலாமால்.

அன்னநாட் டினிலமையார் தோளமையோர் புறங்கொண்ட வமலன்கங்கைப், பொன்னிதழ்ச் சடைப்பெருமான் வடகயிலை தனிலமரும் பொலிவுமானத், தன்னினிமை யாற்பிறசொற் சிறப்பிலைவென் றோங்குதமிழ்த்தையல்காண, நன்னயமா விணைமர்ந்தானைக்கோள வலாவயங்கு நலக்கமாதோ.

ஏவருந்தபத்தினாலு மியம்பருஞ்செபத்தினாலு
மேவருமுத்தியெய்தின் மிகவெளிதாகயாவென்
றாவினாற்பெறுவெனென்றே நலமிகுயமகமாகப்
பாவினுட்சிறந்தவெண்பா பதிற்றுப்பத்தியம்பினானால்,

சீர்பெறுகைலைக்கேற்ற தெக்கணைகலையென்னக்
கூர்பெறுவாள்வேற்செங்கைக் குளக்கோட்டன்கோயில்செய்ய
வேர்பெறுபதிகஞான சம்பந்தனியற்றக்கொண்ட
பார்புகழ்கோணைவாழ்தம் பையநாவலவன்றானே.

## திரிகோணமலை சி. வேலுப்பிள்ளை

சொல்லிய

வெண்பா.

பாலு மமுதும் பழமுமொன்றா மத்தித்தாப்
போலு மதுரம் பொழிதமிழால்—வேலேந்துங்
கையனுமைதந்த கருணா கரன்மேற்றம்
பையனுரை வெண்பாவின் பண்பு.

கல்லாருங் கற்றாருங் கண்டாருங் கேட்டாரும்
புல்லாரும் வெண்பா புகலவே—யெல்லாருந்
தம்பைய னென்றேத்தித் தாமகிழ்ந்து கொண்டனராற்
றம்பைய நாவலனைத் தான்.

போதுறைவோன் றன்னுலகோ பூவளர்ந்தோன் றன்னுலகோ
சீதமதி வேணியரன் சேருலகோ—யாதறிதான்
முத்துக் குமார முதல்வனையித் தம்பையன்போற்
பத்தியுடன் பாடிப் பகர்.

உ

சிவமயம்.

# குமரநாயகர்வெண்பா.

## விநாயகர்துதி.

சித்தத்துக்கெட்டாச்செகசோதியாய்விளங்கு
முத்துக்குமாரமுதல்வன்மேற்—பத்தியுடன்
வெண்பாவின்மாலைவிளம்பவெளியேற்கருளுங்
கண்பாய்மதத்தகளிறு.

## நாமகள் துதி.

வேடன்மகளைவிரும்பிக்கலந்தருள்செவ்
வேடன்பெரும்புகழைவேண்டியே—பாடுதற்கு
வாணியதிமதுரவண்ணப்பசுங்கிளிநேர்
வாணிதுணைவருகுவாள்.

## அவையடக்கம்.

பாவாற்புகழ்படைத்தபாவாணர்முன்யான்வெண்
பாவாற்குமாரன்பதம்பேணி—நாவா
லிசைக்குந்துதியையினிதாகக்கொள்வா
ரிசைக்குற்றம்பாராரெடுத்து.

## நூல்.

பூமேவுபல்லுயிரும்போற்றிப்புரிந்தளித்த
பூமேவுநாதன்புகழ்ந்தேத்துந்—தேமேவுஞ்
சங்கரிக்குமைந்தவெழிற்சண்முகநிற்பாடவருள்
சங்கரிக்குநன்மருகாதா.

கனகவுடையானுங்கடிநறவச்செங்கோ
கனகமலரானுங்களிப்பான்—முனைநாளில்
வாதாடிப்போர்புரியவந்தருள்வான்றந்தைமைந்த
வாதாபொற்பாதமலர். (௧௪)

நடுக்கமுறக்கைநகத்தானுன்மறைதேர்வேதா
நடுக்கம்பறித்தவனைநல்கும்—கடுக்களத்தன்
மானத்தாக்குரித்தவல்லாளன்மைந்தனெங்கோ
மானத்தன்வேற்கைவலவன். (௧௫)

சோகனதக்கண்ணனிதங்கும்பிட்டுப்போற்றுதிருக்
கோகனத்தில்வாழுங்குளக்கோவன்—மாகனக
வம்பலத்தினின்றுடுமையன்றிருக்குமர
னம்பலத்தின்மிக்கவடலான். (௧௬)

நாட்டங்கொடுபோநக்கீரற்கேற்றவரு
ளாட்டங்கொடுத்தாண்டநாயகமே—யீட்டமுறு
மண்டங்குலுங்கவடர்த்தார்க்குங்காலனென்மு
னண்டவிடாமற்காத்தருள். (௧௭)

காரம்படைத்தகளிமயக்கான்மிக்கவகங்
காரம்படைத்தவன்றன்கம்மறுத்த—வீரமிகும்
பத்திரைக்குநாயகனைப்பண்டுதவினான்பயந்த
பத்திரைக்குமைந்தமுகம்பார். (௧௮)

வள்ளலாயுள்ளவர்க்குள்வாய்த்தகுமாரகருணை
வள்ளனீயல்லாதுமற்றுமுண்டோ—தெள்ளுதமிழ்
பாடுவார்க்கெல்லாம்பரிசளித்துச்செல்வத்தின்
பாடுபெறவைப்பாய்பரிந்து. (௧௯)

செய்யகரிக்குஞ்சிலம்பிக்குமுன்னருளைச்
செய்யமலன்பெற்றதிருக்குமரன்—பையரவின்
மேலாடுகூத்துடையவிண்டுமெருகன்றனக்கு
மேலானோரில்லைவிளம்பு. (உ0)

போதப்பரிவுநிறைபூரணியாள்கொம்மைமுலைப்
போதப்பாலுண்டவெழிற்புத்திரா—மேதக்க
சங்கத்தமிழ்ப்புலவர்சான்றோர்கள்போற்றுபிர
சங்கத்தநல்லருளைத்தா. (உக)

ஆத்தியணிந்தானருண்மதலைதேவர்களா
லாத்தியெடுத்தேத்துமறுமுகவேள்—சாத்திரங்க
ளெல்லாமலயமுனிக்கேற்கநயந்தளித்த
வெல்லாயிரத்தானிறை. (உஉ)

அத்தைமகளையவருச்சுனற்குப்போரில்விச
யத்தைப்பெறவுதவியானமால்—சித்தமுறக்
காத்துவளர்த்தநிலைக்காமனுக்குமைத்துனவேள்
காத்தளிக்கநல்லகடவுள். (உந)

ஐயமெடுக்கவயன்றலையோடேந்துசரத்
தையனரிபோற்றுமதிகார—னையவல
பூதத்தலைவன்புரிந்தளித்தகோவெனுளம்
பூதமடையப்புரிகுவான். (உச)

கஞ்சன்வரவிட்டகரிக்கோட்டினைமுரித்த
கஞ்சமலர்க்கண்ணனிருங்கார்மேனிப்—பஞ்சவர்க்காய்ச்
சந்துநடந்தவரிதன்மருகன்சார்மலயச்
சந்துசெறிதோளான்சரண். (உரு)

சிற்றுண்டிகொண்டுசெழுஞ்சடைமேன்மண்சுமந்த
சிற்றம்பலவாணர்செம்மலே—கொற்றமுறு
தீராதிருச்செந்தூர்த்தேவேநீயென்பாவந்
தீராதிருக்கிலென்யான்செய்கு. (௨௬)

அஞ்சனைசேய்போற்றுமரிமருகனண்டர்தமை
யஞ்சலெனக்காத்தவருளாளன்—கொஞ்சுகிளி
மாமதுரவாணிகுறவள்ளிக்குவாய்த்தருகன்
மாமதத்தண்டார்கழலைவாழ்த்து. (௨௭)

பூச்சரமைந்தானைப்பொடிபடுத்தபொற்கொன்றைப்
பூச்சரமார்வேணிபரன்புத்திரா—பேச்சமுதப்
பண்ணார்மொழிவள்ளிபங்காளாநாயேனைப்
பண்ணுதொழிமேற்பவம். (௨௮)

செங்கமலம்போன்றசிலைவகரத்தில்வந்தெழுந்த
செங்கமலந்தன்னைச்சிரத்தணிந்த—புங்கமுறு
காமாரிதந்தவருட்காதலனேயென்னைநிதங்
காமாரியொத்தகரத்தாய். (௨௯)

கண்ணப்பியுள்ளங்களிசிறந்துவேடர்குலக்
கண்ணப்பனெச்சில்களித்துண்ட—பண்ணவனூர்
செம்மலேசெம்மலர்தூய்த்தேவர்தினம்போற்றுமருட்
செம்மலேமெய்க்கருணைசெய். (௩௦)

கிரிக்குமரிக்கன்பானகேள்வனெங்கள்கோசக்
கிரிக்குமரிக்குந்தேடக்கிட்டா—வரிக்கரத்தன்
பாலநயனத்தன்பரிவாகப்பண்டளித்த
பாலநயந்தேழைமுகம்பார். (௩௧)

மாதர்மிகப்பெற்றமணிப்பூணிலங்குமுலை
மாதர்வலைப்பட்டுமயங்காம—லாதரவாய்க்
கந்தாகுமாரசதிர்வேலாவெற்குநற்சு
கந்தாவென்றேத்திக்களி. (௩௨)

மாமிக்குயர்ந்தமதிமுடியன்றேவியுமை
மாமிக்குநல்லமருமகளாம்—பூமிக்குச்
சிங்காரம்பெற்றவள்ளிதேவிக்குவாய்த்தவெழிற்
சிங்காரம்பெற்றவனைத்தேடு. (௩௩)

கண்ணிமலர்க்கூந்தற்கனகப்பூண்மாதர்மயற்
கண்ணியிலேபட்டுக்கலங்காமல்—வண்ணமணிப்
பாடிபுனையகலப்பண்ணவனார்மெய்ப்புகழைப்
பாடினனியுண்டேபலன். (௩௪)

மத்தமலர்சூடிமழுவேந்திநின்றாதை
மத்தமொழித்தாயோவலுநீலி—சித்தமுற
வேட்டமனையாளும்வேடிச்சிநின்பெருமை
வேட்டல்செய்வார்க்கில்லைவியப்பு. (௩௫)

தாரக்கிரிவாழுஞ்சங்கரனார்முன்னளித்த
தாரக்குறத்திபுணர்சண்முகனே—பாரகத்திற்
செந்திநகரன்போற்செகசோதியாய்விளங்குஞ்
செந்திநகராயுனதுசீர். (௩௬)

பொன்னம்பலவன்புனாமுழந்தாள்கண்ணுமைசேர்
பொன்னம்பலவனுக்கோர்புத்திரனும்—பன்னிருதோள்
வாகையுடையாய்வளனுடையாய்கற்பகம்போல்
வாகையுடையாய்கருணைவை. (௩௭)

அஞ்சத்திரத்தலைக்கூயாரணத்தின்மெய்ப்பொருள்கேட்
டஞ்சப்புடைத்தேயலக்கணுற—வெஞ்சிறைக்கண்
வைத்தங்குயிர்படைத்தவானோர்தலைவனெங்கோ
வைத்துன்பறமனனேவாழ்த்து. (௩௮)

சந்துமுலைப்பரவைதன்பாணஞ்சுந்தரற்காய்ச்
சந்துநடந்தசிவசங்கரனார்—மைந்தனே
பாலைநிகர்சொற்குறத்திபங்காளாமெய்க்கருணைப்
பாலையனேசன்னருளாற்பார். (௩௯)

மாதங்கப்பொற்பூண்வயங்குமுலைகொண்டதிரு
மாதங்கத்தானுக்குமைத்துனனுஞ்—சீதமதிக்
கோடுபுனைந்தசடைக்கோமான்றிருக்குமரன்
சோடும்வகையில்லான்குணம். (௪௰)

அந்தரமுமம்புலியுமார்வேணியண்ணலரு
ளந்தரமில்செவ்வேளறுமுகங்க—ளந்தரத்தின்
மாமதியோசெங்கமலவண்ணச்சிறப்போவென்
மாமதியாலென்னவருக்கு. (௪௧)

மாதுளையின்மிக்கவனப்பலங்காரம்படைத்த
மாதிருவோரைமணந்தமர்ந்த—வாதரவின்
வாழிகுமரன்மனமுவந்துதேவர்தொழ
வாழிடந்தென்கோணைவரை. (௪௨)

பாலம்புராசிதனிற்பள்ளிகொண்டானுக்கிளைய
பாலம்புரைநாட்டப்பார்ப்பதியாள்—சீலமுறு
காதலனாப்பெற்றகதிர்வேலனன்பனையாள்
காதலுளான்பொற்றாள்கருது. (௪௩)

கந்திகைப்பூங்கோதைக்கனிவாய்மகளிர்மயக்
கந்திகைப்புக்கொண்டுகலங்காமற்—சிந்தமே
யாறுமுகனையனுதினமும்பூசித்தா
லாறுமுந்தன்றீயவகம். (சச)

வாமச்சோவிந்தன்மனமகிழத்தந்தமகன்
வாமக்கோவிந்தன்மருகேசன்—நாமிக்க
சாந்தகமழ்புயத்தான்றன்னடியாரானருளை
சாந்தமுளாருக்கருள்வன்சார்ந்து. (சரு)

மாதருக்குமிக்கமதயானைமாணளித்த
மாதருக்குநல்லமணவாளன்—மாதருச்சூழ்
தானத்தரசளித்தசண்முகவேள்கொண்டபிர
தானத்தையன்புடனேசாற்று. (சசு)

விண்டுலவுகின்றவியன்முடிகொண்மேருமுதல்
விண்டுதொறுஞ்சென்றுவிளையாடு—மண்டர்புக
ழீரமதிவேணியிறைவனருள்வேடன்பா
லீரமுடையார்க்கிரங்குவான். (சஎ)

சிராகுலைவயுடையசெம்மற்கிளையவெழிற்
சிராகுவலயத்திற்றேடரிய—தாரார்க்கீ
பத்தனேவாகைபடைத்தவிறன்மேவுகைச்சா
பத்தனேயேழுமுகம்பார். (சஅ)

சாதியுறுசெச்சைத்தடமுடியாய்வள்ளியைப்பெண்
சாதியெனக்கொண்டதயாளருணு—பாதிமதி
யப்பணியும்வேணியமலனார்தன்மகனே
யப்பனியன்னையுநீயாம். 31602 (சகூ)

அரவிந்தமன்னமுகத்தம்மையொருபாக
னரவிந்தஞ்சூடியருளாற்—றருமைந்தன்
பச்சைமயிலாளன்பரிவாயெனைக்காக்கும்
பச்சைமருகானபகவன். (௫௦

வந்துகடவுற்றமணிப்பொற்றேர்மீதேறி
வந்துவிளையாட்டயரும்வள்ளலே—கந்தமிகுந்
தாராய்குறட்பூதத்தாராய்சுகமெனக்குத்
தாராய்மனமகிழ்த்தான். (௫௧)

அந்தரிக்குவாமமளித்தசிவன்செஞ்சடைமே
லந்தரிக்குமெங்களகிலேசன்—முந்தரிக்குச்
சக்கரமொன்றீந்ததனிமுதல்வன்முற்பயந்த
சக்கரவேடன்கழலைச்சார். (௫௨)

மத்தையறுகோடவனைந்தான்மகன்றிருநா
மத்தைநிதஞ்சொல்லிவணங்காதார்—சித்தக்
கவலைகொண்டோடிக்கழிதுயரான்மாமோ
கவலைகொண்டேகலங்குவார். (௫௩)

பத்துப்பவத்தனருள்பங்கயனைக்குட்டியதி
பத்துக்குப்பின்னுளன்பாணிறத்த—முத்துக்கு
முல்லைக்கும்வாய்த்தமுறுவற்குறத்தியெனு
முல்லைப்பெண்கூடுமுதல்வன். (௫௪)

கங்கையறுகடுக்கைகமழுஞ்சடையன்
கங்கைதரித்தபரன்கண்ணுதலா—னெங்கோமான்
பெற்றமுலைக்கத்தபெருமானருளினிதாய்
பெற்றகுமரன்புகழைப்பேசு. (௫௫)

தாமரையான்போற்றுந்தனிமுதலாம்பொற்கொன்றைத்
தாமரைநீங்காதுபுடைசார்ந்திருக்கும்—பூமருவு
கோதையுமைபெற்றகுழந்தைவடிவேலனென்பாற்
கோதையகற்றிக்காக்குங்கோ. (௫௬)

கந்தனையாய்ப்பெற்றகரியநிறமான்மருகன்
கந்தனையெப்போதுங்கருதியே—வந்தனைசெய்
தெண்ணிக்களிப்புற்றிறைஞ்சுவார்விண்ணவரு
மெண்ணிக்கைகொள்ளவிருப்பார். (௫௭)

பாரிடங்கொளாமற்பரம்பிச்செறிந்துலவும்
பாரிடங்களானபடையுடையாய்—பாரிடரை
மாற்றப்பிறந்ததிருமான்மருகாதீவினையா
மாற்றமுறுமற்கருணைவை. (௫௮)

தத்தைமொழிவள்ளிபுணர்சண்முகனார்தம்மலர்ப்பா
தத்தைமகிழ்வோடுதரிசித்தான்—முத்திநக
ரர்சைக்கிறைவர்தினமண்டர்முனிவோர்துதிக்க
வாசையுடன்வாழ்ந்திருக்கலாம். (௫௯)

வல்லிக்கனையமுலைவாணிகுறவள்ளியெனும்
வல்லிக்குவாய்த்தமணவாளன்—வல்லிக்கைப்
போக்கியடியாரைப்புரந்தளிக்குந்தேவரவு
போக்கில்லான்றாளேபுகல். (௬0)

அண்டர்மிகவாட்டியருஞ்சிறைக்கண்வைத்திட்ட
வண்டர்தமைக்காத்தவறுமுகவன்—றொண்டர்க்குக்
கைகண்டநெல்லிக்கனிபோற்கலியுகத்திற்
கைகண்டதெய்வமவன்காண். (௬௧)

மாமனெழின்மார்பன்வனமாலியைத்தனக்கோர்
மாமனெனக்கொண்டவடிவேலன்—காமனவன்
பக்கமுறவளர்த்தபாவைதெய்வயானைதனைப்
பக்கம்வைத்தாண்டபரன். (௬௨)

அந்திகமழுஞ்செஞ்சடைமேலாரங்கெக்கைகபுனை
யந்திவணன்றந்தவறுமுகவேள்—செந்திநகர்த்
தானத்தான்றஞ்சமெனத்தன்னைவணங்காதவரைத்
தானத்தான்றண்ணளிசெய்யான். (௬௩)

மாதிரத்தினெல்லைவணங்கும்புகழ்படைத்த
மாதிரத்தின்மிக்கவயமுடைய—மாதிரத்தைச்
சிங்கத்தைச்சூரைச்சிதைத்தகுகனென்பவத்தைச்
சிங்கத்தடிந்தருளுந்தேர்ந்து. (௬௪)

கொல்லைதனிகாத்தகுறமகளைநாண்மலர்ப்பூங்
கொல்லைதனிற்கூடியருள்கோமானே—பல்லைமுனங்
காட்டிப்புரமெரித்தகாலகனலன்சுதநிற்
காட்டிலெவரீவர்கதி. (௬௫)

சித்தந்தெளிவடையச்செப்புமறையாகமம்வா
சித்தறிவுமிக்கவருந்தேடரிய—முத்திநக
ராளுந்தனிமுதலேயன்புடையேற்குன்பதந்தந்
தாளுவதென்னாளோவருள். (௬௬)

வன்போதகத்தைவயப்புலியைமுன்னுரித்த
வன்போதங்கேட்கமறைப்பொருளை—முன்போது
மாணிக்கக்குன்றேமறைகளெல்லாங்கண்டபிர
மாணிக்கவொண்ணாதுன்மாண்பு. (௬௭)

நாகமணிவில்லானயந்தளித்ததெய்வீக
நாகமணிபோன்மெய்ந்கலனுடையாய்—நாகவனப்
பூச்செறியுஞ்செந்திப்புரத்தாய்கமழ்சாந்தின்
பூச்செழிலாய்நோக்கம்புரி. (௬௮)

ஆறக்கரமுடையாயாறனையாயென்பவத்தி
யாறக்கருணைபுரிந்தாள்கண்டாய்—மாறகலுந்
தேவாதிபனைமுன்போற்சேணுளவைத்தவருட்
டேவாதிருக்குமரேசா. (௬௯)

பத்தரையுமொன்றும்படைத்தமுகனன்புறுதன்
பத்தரையெப்போதும்பரிந்தளிப்பான்—சித்திரைக்குப்
பின்றொளனவிளங்கும்பேரழகன்மாமுகற்குப்
பின்றனமெய்ப்பெருமையான். (௭௦)

பாரைப்புரந்தளிக்கும்பண்ணவனீயென்றுதிப்
பாரைத்துணைகாக்கும்பண்புடையாய்—நீரைத்
தலைவைத்தசங்கரனார்தன்மகனேவானத்
தலைவைத்தசீரொனக்குத்தா. (௭௧)

வாசத்தண்ணீபமலர்முடியான்செந்திநகர்
வாசத்தன்வள்ளிமணவாளன்—பாசத்தை
யாசையாய்க்கொண்டவரானார்திருமைந்த
னாசையுளானன்பரசத்து. (௭௨)

செங்கைநாளிற்சிறந்ததேவனுதவுங்குமரன்
செங்கைவேலன்பதத்தைச்சேவிப்பார்—பங்கமுறா
வானுலகத்தேவர்களுமாதவத்திருேலுயர்கோ
வானவரும்போற்றவதிவார். (௭௩)

சிக்கத்தனந்திறக்குஞ்சேயிழையார்சிந்தையினே
சிக்கத்தனங்கொடுத்ததீயேனைப்—பக்கமுறத்
தாபரிப்பாய்வீரமயிற்சண்முகனேநின்பாதந்
தாபரிக்கவெந்தன்றலை. (எ௪)

மாவனத்தன்றன்னைமலருந்தியாலளித்த
மாவனத்தன்றந்தமதவேளை—வேவெரித்த
வங்கவளையானுதவுமைந்தன்பவக்கடற்கோர்
வங்கமவன்பாதமலர். (எ௫)

மாயாதவன்றனக்குமைத்துனனுமத்தமுடி
மாயாதவன்றனக்குமைந்தனே—யோயாத
சஞ்சலப்பேர்வெள்ளத்துட்டாழ்ந்துவருந்தாதெனக்க
சஞ்சலவாழ்வைத்தருவாய்சார்ந்து. (எ௬)

தேசாரும்வெள்ளிச்சிலம்பினுறைதேவிபுறத்
தேசாருமன்பனருள்செம்மலே—யாசார
மாசளவுமில்லாவடியேன்றனக்கிரங்கி
யாசகலநீக்கியருள்வாய். (எ௭)

கோக்குளத்தன்சேவேறிகுன்றவில்லிமன்றாடெங்
கோக்குளத்துக்கின்புதருங்கோமதலை—கோக்குழுவின்
பின்னாய்த்திரிந்தபெருமான்மருகேசன்
பின்னமடையாதபெற்றிபேசு. (எ௮)

நாகத்தணியுடையானாகமணிவில்லுடையா
னாகத்தினின்றாடம்புரிவா—னாகத்தின்
மேதைமேற்போர்த்தவிமலனுதவுங்குமரன்
மேதையர்தாழ்பாதம்விரும்பு. (எ௯)

பாரகத்திலென்றும்பயின்முனிவர்விண்ணவர்தம்
பாரகத்திலெண்ணிப்பரிந்துபுக—ழேரகத்தி
லென்றுங்குடியிருக்குமெங்கோமான்காலையெழு
மென்றுங்கரெழிலையேத்து. (௮0)

மாமதலைசென்னிவனைந்தபெருமானளித்த
மாமதலைதன்னைமறவாமற்—சாமளவுஞ்
சிந்தித்துவந்தனைகள்செய்மனனேயானந்தச்
சிந்தினிடைமூழ்கிச்சிறந்து. (௮௧)

பாராவாரப்படியைப்பண்டயின்றமால்வடிவம்
பாராவாரங்கொண்டபண்ணவனூர்—சீராகப்
போற்றிவளர்த்தசெல்வப்புத்திரனின்பொற்பாதம்
போற்றிசெயுமன்பேபுரி. (௮௨)

வேலைவிட்டுவெந்தவிடமுண்டவனேயன்
வேலைவிட்டோர்குன்றைவெளிகண்டோன்—மாலை
மணம்படைத்தவள்ளிமகிழ்மார்பனிய
மணம்படைத்தபாதம்வழுத்து. (௮௩)

பூதத்தடியிருந்துபோதமுனிவர்க்குரைத்த
பூதத்தலைவனூர்புத்திரனே—பாதத்தை
யுன்றுதொழிந்தவொருபாவியெங்ஙனோ
வுன்றுளாவாவதுனை. (௮௪)

செச்சைவடிவென்னத்திருமுகங்களாறிலங்குஞ்
செச்சைமுடிக்கணிந்தசெவ்வியரின்—பச்சைமயில்
வாகன்சிறந்தகொடிவாரணத்தன்மிக்குயர்ந்த
வாகனருட்கந்தவனையான். (௮௫)

கோவுண்டமால்கோவாய்க்கோமுனியாக்கொண்டகரன்
கோவைப்புனைந்தமுடிக்கோறுதலான்—கோவுடைய
கோவைப்புரக்கக்கொடுத்தகுமரேசன்மெய்க்
கோவனையவெங்கள்குகன்.

மாக்கொண்டமாலயனும்வானவருமேத்துமயின்
மாக்கொண்டுலாவும்வடிவுடையான்—மாக்கொண்ட
மாவின்மடியின்மகிழ்ந்துவிளையாட்டயரு
மாவுடையானீசன்மகன்.

தண்டந்திகழ்வாளஞ்சங்குடனேசக்கரங்கோ
தண்டம்பரித்தவரிதானளித்த—வொண்டொடிமார்
பாகத்தன்பச்சைமயிற்பாகன்பணிந்திடவன்
பாகத்தந்தாள்வான்பதம்.

பாயரவங்கொண்டபரந்தாமனார்மருகா
பாயரவப்பச்சைமயிற்பாகனே—நேயமுடன்
சிங்காசனத்திலிருதேவிமாரோடிருக்குஞ்
சிங்காரங்காட்டியருள்செய்.

சிவதநேர்மென்சாயற்றிங்கள்வதனக்கரிய
சிவதப்பூங்கோதைச்சிவகாமி—யாவலுடன்
மைந்தவாவென்றழைத்தவாய்மழலைகேட்டுவக்கு
மைந்துடையாய்நெஞ்சிரக்கம்வை.

சேவையூர்தாரச்சிலம்பினுறைமெய்த்தேவன்
சேவையூர்தன்னிற்றிருநடஞ்செய்—கோவைசிக
ளாயாவறுமுகவாவன்பாளர்க்காக்குமுரு
கையாவுனக்கடைக்கலம்.

திருத்தங்குமாறுமுகச்சிங்காரச்செவ்வித்
திருத்தங்குறைவுபடாத்தேவே — மருத்தங்கு
மாலையனே சோலைமலையானே வள்ளிதன்மேன்
மாலையனே தாநல்வளம். (௯௨)

கோடுகொண்டமாற்கருளுங்கும்பிமுகன்செங்கையில்வெண்
கோடுகொண்டானுக்கிளையகோமானே — பீடுகொண்ட
காலாயுதம்பிடித்தகையனே பொற்றண்டைக்
காலாவுனதருளைக்காட்டு. (௯௩)

வாகுதனின்மிக்குயர்ந்தவள்ளிமுலைக்கோடுழக்கும்
வாகுதனிமேருவரையனையான் — சேகுடைய
சூரனுயிர்குடித்ததுங்கமுறுசெங்கையில்வேற்
சூரநின்பொற்றுடுணை. (௯௪)

பேரன்புடையமனப்பெட்பார்நவநிதிக்கு
பேரன்போல்வாழ்வைப்பெறலாமே — நேரில்லாப்
பண்ணவர்க்குமேலானபண்ணவனுரான்றளித்த
பண்ணவன்பாதம்பணிந்தக்கால். (௯௫)

காட்டினரிக்குழுவைக்கந்துகமாய்ப்பாண்டியற்குக்
காட்டிக்கொடுத்தவருட்காமாரி — காட்டினிவர்
மாசைநிறங்கொண்டமகமேருவில்லிமகன்
மாசையகற்றித்தருநல்வாழ்வு. (௯௬)

…ாத்திரத்தையுண்டவரிகூருங்கணையாகக்
கோத்திரவிற்கொண்டுபுரக்கோளெரித்தோ — னேத்திரத்திற்
றீந்துபொறியாறுய்ச்செனித்தவனே மெய்யருட்குச்
சிந்தனையாய்செப்பரிதுன்சீர். (௯௭)

ஆதவனோடங்கிமதியாகியமுக்கண்ணன்மா
யாதவனெல்லாவுயிருமாக்குவோன் — மாதவனை
யம்புயனைத்தன்னிருபாலாவுடையான்றந்தமுந்நான்
கம்புயனைப்போற்றினகம்போம். (

வண்ணத்தாக்குவளசத்தர்மாமருக
வண்ணத்தரக்குரித்தோன்மைந்தபசு — வண்ணத்த
சேவன்மயில்கடவுசெவ்வேளேயென்னகத்துச்
சேவன்மயினனலறச்சேர்ந்து. (

ஆனனமாறுடையையன்றனதடிய
ரானனமாறுடைத்தாள்குமர — ஞானமா
பன்னத்தறிதுயிற்கோபாலன்மருகனென்று
பன்னத்தருவன்பதம். (

## குமாரநாயகர் வெண்பா

முற்றிற்று.